நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை குருத்துப்பூச்சி தாக்குதல்: 3 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர் பாதிப்பு

ப. இசக்கி

First Published : 18 Oct 2010 03:12:31 AM IST

திருநெல்வேலி : திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர் குருத்துப்பூச்சி நோய்த் தாக்குதலால் சேதமடைந்துள்ளது. இதனால், சுமார் 2 ஆயிரம் விவசாயிகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

தென் மேற்குப் பருவ மழை காலமான கார் பருவத்தில் கடனா நதியின் வடிநிலப் பகுதியான அம்பாசமுத்திரம் வட்டம் ஆழ்வார்குறிச்சி தென்கால்வாய், மஞ்சம்புளி கால்வாய், பெருங்கால்வாய், அரசபத்து கால்வாய் ஆகியவற்றின் கீழ் உள்ள பாசனப் பகுதிகளில் 3 ஆயிரத்துக்கும் கூடுதலான ஏக்கர் நிலங்களில் அம்பை-16, கோவை-65 ஆகிய நெல் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். இதில் ஆழ்வார்குறிச்சி தென்கால் பகுதியான செங்காநல்லூரில் சுமார் 100 ஏக்கர் நிலங்களில் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய ஆழ்வார்குறிச்சி, பெத்தபிள்ளை குடியிருப்பு, அழகப்பபுரம், சம்பன்குளம், புதுக்குடியிருப்பு, சிவசைலம், பூவன்குறிச்சி, காசிநாதபுரம், கீழாம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் இன்னும் ஒரு வார காலத்தில் அறுவடைப் பணிகள் தொடங்கும் நிலை இருந்தது.

இந்நிலையில், கடந்த 10 நாள்களுக்கு முன்பு அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்த குருத்துப்பூச்சி நோய்த் தாக்குதல் தற்போது அனைத்துப் பகுதிகளுக்கும் பரவி நெல்லில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால், கொத்துக்கொத்தான நெல் மணிகளுடன் பொன்னிறமாய் காட்சி அளிக்க வேண்டிய வயல்வெளிகள் வெள்ளைவெளேரென வெள்ளைச்சாவிக் காடாய் காட்சி அளிப்பதைப் பார்த்து விவசாயிகள் கண்ணீர் சிந்தி கொண்டிருக்கின்றனர்.

நோய்த் தாக்குதல் இல்லாவிட்டால் குறைந்தபட்சம் ஒன்றரை மேனி, அதாவது ஒரு ஏக்கருக்கு 18 கோட்டை (36 மூட்டைகள்) நெல் மகசூல் கிடைத்திருக்கும். இப்போது எதுவும் இல்லாமல் வெறுங்கையாய் நிற்கிறோம். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர்.

ஒரு ஏக்கரில் நெல் பயிரிட சுமார் ரூ. 3,500 முதல் ரூ. 5 ஆயிரம் வரை செலவாகிறது. ஒன்றரை மேனி நெல் கிடைத்தால் கூட ஏக்கருக்கு ரூ. 27 ஆயிரம் கிடைத்திருக்கும். இப்போது

குருத்துப்பூச்சி நோய்த் தாக்குதலால் விவசாயிகள் செலவு செய்த பணத்தையும் இழந்து, மகசூலையும் இழந்து நிற்கின்றனர். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு ஏக்கருக்கு குறைந்தபட்சம் ரூ. 10 ஆயிரமாவது இழப்பீடு தர வேண்டும் என்றார் கடனா நதி நீர்ப்பாசன நீர்ப்பகிர்மான குழுத் தலைவர் ஆர். கசமுத்து. இவருக்கு ஒன்றரை ஏக்கர் நெல் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது.


கடனா நதியில் இந்த ஆண்டு குறைவான அளவு தண்ணீர் இருந்ததால் வழக்கமானபடி ஜூன் முதல் தேதி பாசனத்துக்காக அணை திறக்கப்படவில்லை. இந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழையும் காலத்தே பெய்யாததால் அணையில் நீர்மட்டமும் உயரவில்லை. எனவே, ஒரு மாதம் கழித்துதான் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதன் பின்பு விவசாயிகள் நாற்றுப்பாவி நடவு செய்தனர். கிணற்றுப் பாசன வசதி உள்ள விவசாயிகளும், வெளியூர்களில் இருந்து நாற்றை வாங்கி வந்தவர்களும், முதல் அணைப் பகுதியைச் சேர்ந்த செங்காநல்லூர் விவசாயிகளும் முதலில் நடவு செய்தனர். அவர்கள் இப்போது அறுவடையை தொடங்கியுள்ளனர். அந்த பயிர்களில் நோய்த் தாக்குதல் இல்லை. நாற்றுப்பாவி நட்ட விவசாயிகளுக்கு நடவு காலதாமதம் ஆனதால் செப்டம்பர் இறுதியிலும், அக்டோபர் முதல் வாரத்திலும் பெய்த எதிர்பாராத மழையில் பயிர்கள் சிக்கி நோய்த் தாக்குதல் ஏற்பட்டுள்ளதாக கசமுத்து தெரிவித்தார்.

பயிர் காப்பீடு இல்லை: இயற்கை இடர்ப்பாடு மற்றும் நோய்த் தாக்குதலால் பயிர்கள் சேதமடைந்தாலோ, மகசூல் குறைந்தாலோ விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததால் அவர்கள் காப்பீட்டு திட்டத்தில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆழ்வார்குறிச்சியில் குருத்துப்பூச்சி நோய்த் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளில் 100-க்கும் குறைவானவர்களே பயிர் காப்பீடு செய்துள்ளனர். அவர்கள் வங்கிகளில் பயிர்க் கடன் பெற்றுள்ளதால் அந்த வாய்ப்பு கிட்டியுள்ளது. எஞ்சியுள்ளவர்கள் எவரும் காப்பீட்டு திட்டத்தில் சேராததால் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

கார் பருவம் முடிவடைந்து அடுத்து பிசானப் பருவம் தொடங்க உள்ளது. கார் பருவ சாகுபடி கைகூடாததால் அடுத்து பிசானப் பருவத்துக்கு செலவு செய்ய என்ன செய்வது என பல விவசாயிகள் வேதனையில் ஆழ்ந்துள்ளனர். இதற்காக அரசின் உதவியை கோரவும், ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்க்கவும் போராட்டங்களை நடத்த தயாராகி வருகின்றனர் விவசாயிகள்.

**தமிழகம், புதுவையில் இன்று மழைக்கு வாய்ப்பு**

First Published : 18 Oct 2010 01:19:37 AM IST



சென்னை, அக். 17: தமிழகம் மற்றும் புதுவையில் திங்கள்கிழமை ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

÷தென் தமிழகத்தின் கரையோரப் பகுதிகளில் மேற்கில் இருந்து தென் மேற்கு நோக்கி, மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த கடற்காற்று அவ்வப்போது வீசக் கூடும்.

பொன்னேரியில் 20 மில்லி மீட்டர் மழை:

மாநிலத்தில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் 20 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது. சென்னையில் தியாகராய நகர், மயிலாப்பூர், மந்தைவெளி உள்ளிட்ட பகுதிகளில் சனிக்கிழமை இரவு மழை பெய்தது.

சென்னையில்... நகரில் திங்கள்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யக்கூடும்.

**இயற்கை பால் உற்பத்தி, இன்றைய தேவை**

அ. சந்திரசேகர்

First Published : 18 Oct 2010 12:00:00 AM IST

உலகமயமாதல் மற்றும் சந்தைமயமாதல் விளைவாக சர்வதேச அளவில் பால் மற்றும் பால் பொருள்களின் விற்பனையில் கடும் போட்டி நிலவி வருகிறது.

பால் பொருள்களின் விற்பனையை பாதிக்கும் முக்கிய விஷயம், அவைகளின் தரம் மற்றும் குணம் ஆகும். பால் மற்றும் பால் பொருள்களில் அதிக அளவில் அடங்கியுள்ள பூச்சிக்கொல்லி மற்றும் எதிர் உயிரி மருந்துகளின் அளவு அப்பொருள்களை சர்வதேச அளவில் தரமற்றவைகளாக ஆக்கி, நுகர்வோர் முன் விரும்பத்தகாதவைகளாக மாற்றுகின்றன.

உலகின் பல பகுதிகளில் அவ்வப்போது பதிவாகிற "பைத்தியப்பசு' ஜப்பான் காய்ச்சல் மற்றும் ஆந்த்ராக்ஸ் போன்ற நோய்கள் பொது மக்களின் கால்நடை உணவுப் பொருள்கள் மீதான மோகத்தைக் குறைக்கின்றன.

இதுவே வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிலுள்ள பல நுகர்வோரையும், "இயற்கை பால்' பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பியுள்ளன.

இயற்கை வேளாண்மை முறை இன்று பல நாடுகளிலும் சூடு பிடித்துள்ளது. அதோடு "இயற்கை பால்' உற்பத்தியும், பிரபலமாகியுள்ளது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, டென்மார்க் போன்ற

மேலை நாடுகளில் இயற்கை பால் உற்பத்தியின் ஆண்டு வளர்ச்சி வீதம் 30 சதவீதத்துக்கும் அதிகமாகும்.

தவிர அமெரிக்கா, சுவீடன், ஜெர்மனி உள்ளிட்ட மேலும் பல நாடுகளும் இயற்கை பால் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. இயற்கை பால் மற்றும் பால் பொருள்களின் வருங்காலச் சந்தை வாய்ப்பைக் கணக்கிட்ட பல ஆராய்ச்சி முடிவுகளும், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் உலகம் முழுவதுமான பால் பொருள்களின் மொத்த மதிப்பில் 3 சதவீதத்தை "இயற்கை பால் பொருள்கள்' கைப்பற்றும் என்கின்றன.

வளர்ந்த நாடுகளில் உள்ள குறிப்பிட்ட சதவீத நுகர்வோருக்கும் இயற்கை பால் குறித்த விழிப்புணர்வு உள்ளது. தரமான இப்பொருள்களை என்ன விலை கொடுத்தும் அவர்கள் வாங்கி உபயோகிப்பர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஒரு சில நாடுகளில் இயற்கை பால் உற்பத்தியின் வளர்ச்சி வீதம் குறைவாக இருப்பதற்கு காரணமாகக் கருதப்படுவது இப்பாலின் உயர்ந்த விலையாகும். இயற்கை பால் உற்பத்திக்கான செலவு 30 சதவீதம் அதிகரிக்கையில் நுகர்வோர் 60 சதவீதம் விலை அதிகமாக அளிக்க வேண்டி வரும்.

சரி, இனி இயற்கை பால் உற்பத்தியைப் பற்றி பார்ப்போம். நாம் நினைப்பதுபோல் இயற்கை பால் உற்பத்தி அவ்வளவு எளிய விஷயமில்லை. இயற்கை வழி உற்பத்தி பொருள்களுக்கான அங்கீகாரம் பெற்று சான்று கிடைக்க பல தடைகளைக் கடந்து வர வேண்டும். இயற்கைப் பொருள்களின் தரத்தை உறுதிப்படுத்த அவைகளின் உற்பத்தி முதல் நுகர்வோரின் கைகளைச் சென்றடையும்வரை அனைத்து வழிமுறைகளையும், கவனமாகப் பின்பற்றியுள்ளோம் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

இயற்கை வழி உற்பத்திப் பொருள்களின் பரிசோதனையையும், உறுதிப் பத்திரத்தையும் அளிப்பது ஐக்கிய நாடு சபைகளின் கீழுள்ள உணவு மற்றும் வேளாண்மை நிறுவனமாகும். இந்நிறுவனம் சில நிபத்தனைகளை விதித்துள்ளது.

இந்நிபந்தனைகள் இயற்கை விவசாயப் பொருள்களின் உற்பத்தி, பதப்படுத்துதல், முத்திரையிடுதல், விற்பனை செய்தல் போன்றவற்றுக்கு உதவிகரமாக இருக்கும்.

நம் நாட்டிலிருந்து இயற்கைத் தேயிலை தூள், காப்பித்தூள், ஆயுர்வேத மருந்துகள், அரிசி போன்றவற்றை ஏற்றுமதி செய்து வருகிறோம். இதன் மூலம் நம் நாட்டு இயற்கை வழி பொருள்களுக்கான தேவை சர்வதேச அளவில் அதிகரித்து வருகிறது.

இயற்கை பால் என்பது என்ன? கலப்படப் பாலையே பார்த்து, பருகி வரும் நமக்கு இது சற்று வித்தியாசமான அனுபவமாகும். நோயற்ற கால்நடைகளுக்கு பூச்சிக்கொல்லி மருந்தையோ, வேதிஉரம் உபயோகிக்காமல் இயற்கை வழியில் உற்பத்தி செய்த கால்நடை தீவனத்தையோ, பசுந்தீவனத்தையோ உணவாக அளித்து கறக்கும் பாலே இயற்கை பாலாகும்.

எனவேதான் கால்நடைகளின் தீவனத்தின் பெரும் பங்கு பசுந்தீவனமாகவே இருக்கும். கறந்த பாலுக்குக் குறிப்பிட்ட மணமோ, சுவையோ பெறுவதற்காக அதில் எவ்விதச் செயற்கைப் பொருளையும் சேர்க்கக் கூடாது. நோயால் பாதிக்கப்பட்ட பசுக்களுக்கு ஆயுர்வேத அல்லது ஹோமியோ மருந்துகளைக் கொண்டே சிகிச்சை அளிக்க வேண்டும்.

கால்நடைத் தொழிலில் இயற்கை முறையிலான பொருள்களை உற்பத்தி செய்ய பல தடைகள் உள்ளன. இயற்கை பால் போன்ற பொருள்களுக்கு மேலைநாடுகளில் நல்ல தேவை இருந்தாலும், அச்சந்தையை கணக்கிற்கொண்டு வளரும் நாடுகள் உற்பத்தியில் மாற்றங்களைப் புகுத்துவது உள்நாட்டு உற்பத்தி வெகுவாகக் குறைய வழி வகுக்கும்.

ஏனென்றால், இயற்கை வழி பண்ணை முறைகளில் உற்பத்தித் திறன் மிகக் குறைவாகும். எனவே, இப்பண்ணைமுறை நிலை நிற்க உற்பத்திப் பொருளுக்கு அதிக விலை கிடைப்பது காலத்தின் கட்டாயமாகும்.

மேலைநாடுகளில் இயற்கை விவசாயம் ஓரளவு எளிது என்றே கூறலாம். 5 சதவீதம் மட்டுமே பெரும் விவசாயிகளைக் கொண்டுள்ள அந்நாடுகளைப்போல, 70 சதவீதம் சிறு மற்றும் குறு விவசாயிகளைக் கொண்டுள்ள நம் நாட்டில் ஒட்டுமொத்தமாக இயற்கை விவசாயம் பக்கம் திரும்புவது நாட்டின் உணவுப் பாதுகாப்பை வெகுவாகப் பாதிக்கும்.

என்றாலும் நம் நாட்டில் இப்போது நிலையில் உள்ள பாரம்பரியப் பண்ணை விவசாய முறைகளை இயற்கை விவசாய முறைகளுக்கு மாற்றுவது நல்ல பலன் தரும்.

ஒன்றுமல்ல, நம் மூதாதைய முன்னோடிகள் செய்த விவசாயம்தான் இயற்கை விவசாயம். அப்போது வேதி பூச்சிக்கொல்லி மருந்துகளோ, எதிர் உயிரி மருந்துகளோ கண்டுபிடிக்கப்படவில்லை. கறந்த பாலை சூடோடு செம்பில் குடித்து, ருசித்து நீண்ட ஆயுளைக் கொண்டிருந்தனர். இப்போது குறிப்பிட்ட வெப்ப நிலையில், குறிப்பிட்ட நிமிடம், சூடுபடுத்தி பாதுகாக்கவில்லை என்றால் வாந்தி பேதிதான்.

சர்வதேசச் சந்தையின் தேவைகளை அனுசரித்து பல மாதிரி பால் பண்ணைகளை ஆரம்பித்து அவைகளில் பாரம்பரிய முறைகளிலான கறவை மாடு வளர்ப்பை ஊக்குவித்து, இயற்கை பால் உற்பத்தி செய்வதே நல்லது. இம்முறை இயற்கையுடன் ஒன்றிணைந்து செல்வதால் சுற்றுப்புறச் சூழலுக்கும் உகந்ததாகும்.

சந்தையில் விற்கப்படுகிற இயற்கை உணவுப் பொருள்கள் அத்தனையும் முழுவதும், இயற்கையானதல்ல. எத்தனை சதவீதம் இயற்கையானது என்பது அப்பொருள்களின் மேல் குறிப்பிடப்பட்டிருக்கும். பாரம்பரியப் பண்ணை முறைகளிலிருந்து இயற்கை வழிமுறைகளுக்கு மாற 2 ஆண்டுகள் தேவைப்படும்.

கால்நடை வளர்ப்பில் இனப்பெருக்கம், பராமரிப்பு, தீவனமுறை, நோய் கட்டுப்பாடு போன்றவைகளுக்குச் சாதகமான கொள்கைகளை வகுக்க வேண்டும்.

சுற்றுப்புறத்துக்கு இணங்கிய அந்தந்தப் பிரதேசங்களுக்கு ஏற்ற மாட்டினங்களை மட்டுமே வளர்க்க வேண்டும். நம் நாட்டில் இயற்கை பால் உற்பத்திக்கு மிகவும் தடையாக நிற்பது பசுக்களின் மடிவீக்க நோயாகும்.

நம் நாட்டில் மடிவீக்க நோயால் மட்டும் ஆண்டுக்கு | 4,000 கோடிக்கு மேல் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இந்நோய்க்கான சிகிச்சை முறை என்னவோ, ஆங்கில மருத்துவ முறை சார்ந்த எதிர் உயிரி மருந்தை ஊசி மூலம் அளிப்பதாகும். இம்மருந்துகளின் இறுதிப்பகுதி பொருள்கள் கறந்த பாலில் மிகுதியாக அடங்கி, இயற்கை பால் உற்பத்திக்குச் சவாலாக அமைகின்றன.

பல்வேறு விதமான மடிவீக்க நோய்க்கும் இன்று ஆயுர்வேத, ஹோமியோ சிகிச்சை முறைகள் நடைமுறையில் உள்ளன. சிறந்த எதிர் உயிரி மருந்துகளை இம்மருத்துவ முறைகளில் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடித்து இயற்கை பால் உற்பத்தியில் ஒரு வெற்றி மைல் கல்லாகவே அமையும். மேலும், மடிவீக்க நோயை வராமல் தடுக்கும் நோய்த் தடுப்பு முறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

சித்த மருத்துவம், மூலிகை மருத்துவம் போன்றவற்றின் தாயகமான நம் தமிழகத்தில் கால்நடை சிகிச்சைக்காக மேற்கூறிய முறைகளைப் பயன்படுத்துவது இயற்கை பால் உற்பத்திக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

நம் நாட்டில் கால்நடை சிகிச்சைக்காக உற்பத்தியாகிற மிக்க ஆயுர்வேத மருந்துகளும் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகின்றன. அங்குள்ள இயற்கை வழி கால்நடைப் பண்ணைகளில் இம்மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன.

நூற்றுக்கும் அதிகமான கால்நடை இனங்களையும் பல்வேறு இயற்கை வைத்திய முறைகளான சித்த, ஆயுர்வேத, ஹோமியோ மருந்துகளை சொந்தமாக கொண்ட நம் நாட்டில் இயற்கை பால் உற்பத்தியை பாரம்பரிய பகுதிகளில் படிப்படியாக மேற்கொள்ளலாம். தேர்ந்தெடுத்த பகுதியில் இம்முறையைப் பின்பற்றுவது நுகர்வோரையும், உற்பத்தியாளரையும் ஒருசேர திருப்தி செய்வதுடன், ஏற்றுமதி மூலம் அன்னியச் செலாவணியை ஈட்டவும் வழிவகுக்கும்.

**வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

First Published : 16 Oct 2010 11:03:20 AM IST

பழனி, அக். 15:÷பழனியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வெள்ளாடு வளர்ப்பு குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷பழனி அருகே உள்ள திருநகர் அவார்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இலவசமாக வெள்ளாடுகள் வழங்கப்பட உள்ளன. இதையடுத்து திருநகர் அவார்டு பெண்கள்

இலவச தையல் மையத்தில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் இரண்டு நாள்கள் நடைபெற்றன.

÷இந்நிகழ்ச்சிக்கு பழனி கால்நடைத்துறை இயக்குநர் பாபுஜி தலைமை வகித்தார்.

அவார்டு நிறுவன இயக்குநர் பெலிக்ஸ் வரவேற்புரையாற்றினார். கனரா வங்கி விவசாய அலுவலர் நாகராஜ், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வழங்கப்படும் கடன் உதவிகள் குறித்து பேசினார்.

÷திண்டுக்கல் கால்நடைத்துறை பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய டாக்டர் விஜயராஜன், வெள்ளாடுகளை தேர்வு செய்யும் விதம், பராமரிப்பு முறை, நோய்வராமல் தடுக்கும் முறை குறித்து விளக்கினார். மேலும், குறுந்தகடு மூலம் வெள்ளாடு வளர்ப்பு குறித்து படவிளக்கம் காட்டப்பட்டது.

÷காப்பீட்டு அலுவலர் ராஜேந்திரன், கால்நடைக் காப்பீடு திட்டங்கள் குறித்து விளக்கினார். பயிற்சியில் 100-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

÷அனைவருக்கும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. அவார்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் அழகுராஜ் நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 69.36 அடி**

First Published : 16 Oct 2010 10:32:03 AM IST

ஈரோடு, அக்.15: பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 69.36 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 436 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 2300 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 1000 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 10.68 டிஎம்சி.

**வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா**

First Published : 16 Oct 2010 12:16:40 PM IST

ஆலங்குடி, அக். 15: ஆலங்குடி அருகேயுள்ள வேங்கிடகுளத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

நெல் சாகுபடியில் ராஜராஜன் 1000 எனும் திட்டம் சார்பில் நடைபெற்ற நிகழ்சிக்கு மரபுசாரா எரிசக்தித் துறை மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் பெரியண்ணன்அரசு தலைமை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் கே.பி.கே. தங்கவேலு முன்னிலை வகித்தார்.

வேளாண் வணிகத் துறை இணை இயக்குநர் தி. தங்கவேலு சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண் துணை இயக்குநர் பி. ராசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பூபதிகண்ணன், ஊராட்சித் தலைவர் விண்ணொளிமேரி, வேளாண் அலுவலர் பெரியசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, வேளாண் உதவி இயக்குநர் என். சர்புதீன் வரவேற்றார். வேளாண் அலுவலர் செ. சுமித்ரா தேவி நன்றி கூறினார்.

**கரும்பு உற்பத்தியில் தமிழகத்துக்கு 3-ம் இடம்**

First Published : 16 Oct 2010 02:31:09 PM IST

மதுராந்தகம், அக். 15: கரும்பு உற்பத்தியில் தமிழகம் 3-ம் இடத்தில் உள்ளது. தமிழகத்தில் 44 சர்க்கரை ஆலைகள் உள்ளன. சர்க்கரை உற்பத்தியில் தமிழகம் வளர்ச்சி பெற்று வருகிறது என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

÷மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை புனரமைப்புப் பணி தொடக்க விழா, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு விருதுகள் வழங்கும் விழா படாளத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷விழாவில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், புனரமைப்புப் பணிக்கான கல்வெட்டைத் திறந்து வைத்து பேசியது:

÷1961 ஆம் ஆண்டு 800 டன் தினசரி அரவைத் திறன் கொண்டு திறக்கப்பட்டு பின்னர் படிப்படியாக 1995-ல் 2500 டன் அரவை திறன் கொண்டதாக விரிவாக்கம் செய்யும்போது கரும்பு பற்றாக்குறையால் ஆலை மூடப்பட்டது.

÷மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை |33.50 கோடியில் புனரமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆலையின் வணிகவரி மற்றும் வட்டி |15 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆலைக்கு கடனுதவியாக |18.45 கோடியை வழங்கியுள்ளது. இந்த ஆலை புனரமைக்கப்பட்டால் 10 ஆயிரம் விவசாயிகள், 500 பணியாளர்கள் பயனடைவார்கள். தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத்துறை ஆலைகள், 26 தனியார் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இவற்றில் தினசரி அரவைத் திறன் 1.63 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், ஆண்டு அரவைத் திறன் 280 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது.

÷1980-ல் 17 சர்க்கரை ஆலைகள் இருந்தன. தற்போது 44 சர்க்கரை ஆலைகள் உள்ளன. சர்க்கரை உற்பத்தியில் தமிழகம் வளர்ச்சி பெற்று வருகிறது.

÷10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத்துறை ஆலைகளில் இணை மின் உற்பத்திக்கு |849.36 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 40 சதவீத பணிகள் முடிந்துவிட்டன.

÷மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மார்ச் மாதத்துக்குள் அரவைப் பணி தொடங்க வேண்டும். இணை மின் உற்பத்தி திட்டம் தொடக்கம், ஆலையில் ஏற்கெனவே பணியாற்றிய பணியாளர்களுக்கு பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் கூறப்பட்டுள்ளன. இந்த கோரிக்கைகளை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஸ்டாலின்.

÷2009-10-ம் ஆண்டில் மாநில அளவில் சிறந்த செயல்பாடுகளைக் கொண்ட ஆலைகளான கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 2, செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளுக்கு தலா ஒரு விருதும், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 1க்கு இரு விருதுகளும் வழங்கப்பட்டன.

÷கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை "சீனி தரமான சீனி' என்ற பெயரில் 1 கிலோ |29-க்கு பொதுச் சந்தையில் கூட்டுறவு அங்காடியில் விற்பனை செய்வதை தொடங்கி வைத்தார். மேலும் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் ஸ்டாலின் வழங்கினார்.

÷விழாவுக்கு, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தாமோ.அன்பரசன் தலைமை தாங்கினார். சர்க்கரைத் துறை ஆணையர் விக்ரம் கபூர் திட்ட விளக்கவுரையாற்றினார். சர்க்கரைத் துறை கூடுதல் ஆணையர் மா.மதிவாணன் வரவேற்றார். மதுராந்தகம் சட்டப் பேரவை உறுப்பினர் டாக்டர் கே.காயத்ரிதேவி, தொழில் துறை முதன்மைச் செயலர் ராஜீவ் ரஞ்சன், மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ் சாட்டர்ஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## ஏக்கருக்கு |20 ஆயிரம் கடனுதவி

First Published : 16 Oct 2010 02:31:34 PM IST

காஞ்சிபுரம், அக். 15: கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு |20 ஆயிரம் வரை கடனுதவி வழங்கப்படும் என்று காஞ்சிபுரம் மண்டல இணைப் பதிவாளர் கோ.செந்தில்குமார் தெரிவித்தார்.

÷காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள கள்ளபிரான்புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் சிறப்பு உறுப்பினர் கல்வித்திட்ட முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. இம் முகாமில் காஞ்சிபுரம் மண்டல இணைப்பதிவாளர் கோ.செந்தில்குமார் தலைமை தாங்கி பேசியது:

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மட்டுமின்றி, ஆடவர் சுய உதவிக் குழுக்களுக்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. |16 லட்சம் அளவுக்கு சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. திறக்கப்படவுள்ள படாளம் ஆலையால் கரும்பு விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு |20 ஆயிரம் வரை |2 லட்சத்துக்கு மிகாமல் கடனுதவிகள் வழங்கப்படும்.

÷கரும்பு சாகுபடியில் நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்துவதற்காக 5 அடி பார் கலப்பை, இடை உழவு, களை எடுத்து மண் அணைக்கும் கருவி மற்றும் கரும்பு சோதனைகளை தூள் செய்யும் இயந்திரம் ஆகியவை பல்வேறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உள்ள வேளாண்மை சேவை மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வாடகைக்கு விட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கரும்பு சாகுபடி செய்யலாம் என்றார்.

÷இதுதவிர விவசாயப் பணிக்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நடவு நடும் இயந்திரம், களை எடுக்கும் கோனோவீடர் கருவி, கடப்பாரை, மண்வெட்டி, விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான் போன்ற விவசாய உபகரணங்களை வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

÷இந் நிகழ்ச்சியில் மதுராந்தகம் சரக துணைப் பதிவாளர் என்.இளங்கோவன், சரக துணைப் பதிவாளர்கள் பி.ராஜமாணிக்கம், டி.வி.பாக்கியநாதன், சீ.ஞானசேகரன், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் கு.சேகர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு ரூ 27 லட்சம் கடனுதவி**

First Published : 15 Oct 2010 01:36:38 PM IST

அரூர், அக்.14: அரூரை அடுத்த கீரைப்பட்டி பல்லவன் கிராம வங்கி சார்பில் விவசாயிகளுக்கு ரூ 27 லட்சம் மதிப்பிலான கடனுதவிகள் புதன்கிழமை வழங்கப்பட்டன.

கீரைப்பட்டி பல்லவன் கிராம வங்கியின் கட்டட இடமாற்று விழா புதன்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு கிளை மேலாளர் ஸ்ரீதேவி தலைமை வகித்தார். வங்கியின் சார்பில் 372 பயனாளிகளுக்கு ரூ 27 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை தருமபுரி மாவட்ட ஆட்சியர் இரா.ஆனந்தகுமார் வழங்கினார் (படம்). விழாவில் பல்லவன் கிராம வங்கியின் தலைவர் ரங்கராஜன், பொதுமேலாளர் ரகுநாதன், ஒன்றியக்குழுத் தலைவர் இ.அன்பழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**சாம்பல் பூசணி அறுவடை தீவிரம்**

First Published : 15 Oct 2010 01:30:25 PM IST

தருமபுரி, அக்.14: ஆயுத பூஜை விழாவுக்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில், சாம்பல் பூசணி அறுவடை தீவிரமடைந்துள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் புலிக்கரை, அள்ளியூர், கம்மாளப்பட்டி, நாகதாசம்பட்டி, தொம்பரக்காம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300 ஏக்கரில் சாம்பல் பூசணி பயிரிடப்பட்டுள்ளது.

சாம்பல் பூசணி 3 மாதப் பயிராகும். இது ஏக்கருக்கு ரூ 5 ஆயிரம் செலவு செய்தால் 11 டன் வரை மகசூல் தருகிறது. சொட்டு நீர்ப் பாசன முறையில் விளைவிக்கப்படுவதால் பராமரிப்புச் செலவும் குறைகிறது. ஒரு டன் பூசணிக்காய் கடந்த ஆண்டு ரூ 4 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு விளைச்சல் அதிகம் உள்ளதால் ரூ 2 ஆயிரம் வரை விற்கிறது.

தமிழகத்தின் பல மாவட்டங்களுக்கு இவை விற்பனைக்கு அனுப்பப்பட்டாலும், கர்நாடகத்தில்தான் சாம்பல் பூசணிக்கு அதிக கிராக்கி உள்ளது என்கிறார் விவசாயி கோவிந்தசாமி.

தினமலர்

**"ராஜராஜன் 1,000' நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,02:05 IST

ராசிபுரம்: எலச்சிபாளையம் வட்டாரத்தில் "ராஜராஜன் 1,000' நெல் சாகுபடி முறை குறித்த வயல் விளக்க பயிற்சி நடந்தது.நாமக்கல் அடுத்த எலச்சிபாளையம் வட்டாரத்த்துக்கு உட்பட்ட கொண்ணையார் கிராமத்தில், விவசாயி கணேசன் தோட்டத்தில் "ராஜராஜன் 1,000' நெல் சாகுபடி தொழில் நுட்ப முறை குறித்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.ஆத்மா திட்டத்தின் கீழ் நடந்த முகாமுக்கு, வேளாண் இணை இயக்குனர் சிவராஜ் தலைமை வகித்தார். வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் வரவேற்றார். மேட்டுப்பாத்தி நாற்றங்கால் சதுர நடவு செய்தல் குறித்த தொழில் நுட்பம் பற்றி துணை வேளாண் இயக்குனர் பிரபாகரன் விளக்கினார்.

தரக்கட்டுப்பாடு வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி, உயிர் உரம், நுண்சத்து இடுதல் பற்றியும், துணை வேளாண் அலுவலர் தர்மலிங்கம், மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்தல், மார்க்கர் மற்றும் கோனா களைக்கருவி பயன்படுத்துதல் பற்றி வயல் வெளியில் செயல்விளக்கம் காண்பித்தனர்.நிகழ்ச்சியில், உதவி விதை அலுவலர் ராஜகோபால், உதவி வேளாண் அலுவலர்கள் சுப்ரமணியம், குழந்தைவேல், சக்திவேல், செந்தில்குமார், சுப்ரமணி, சுற்று வட்டாரத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை : விவசாயிகள் கடைபிடிக்க அதிகாரி அட்வைஸ்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:21 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கோடை நேரடி நெல் விதைப்பு 12 ஆயிரம் ஏக்கரிலும், சம்பா நடவு 14 ஆயிரம் ஏக்கர், தாளடி 40 ஆயிரம் ஏக்கரிலும் சாகுபடி பணி நடந்து முடிந்துள்ளது. சம்பா நடவு பணி முடியும் தருவாயில் உள்ளது என்று திருத்துறைப்பூண்டி வோளண்மை உதவி இயக்குனர் நடேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: சம்பா பட்டத்தில் சாவித்திரி, ஆடுதுறை 38, ஆடுதுறை 39, தாபட்ளா, கே.ஆர். எச். 2, கோ.ஆர்.எச்.3, வெள்ளை பொன்னி போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா பட்டத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை விவசாயிகள் கடைப்பிடித்திட வேண்டும்.ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் "டி' வடிவம் கொண்ட ஐந்தடி குச்சிகளை 30 எண்களுக்கு குறையாமல் நட்டு பறவை குடில் அமைக்க வேண்டும். இதனால் பகலில் குச்சியின் மேல் இரட்டை வாள் குருவி, மீன் கொத்தி குருவிகள் போன்றவை அமர்ந்து இளம் பயிரை தாக்கும் குருத்துப்பூச்சி, இலை சுருட்டு புழுக்கள், தாய் அண்டு பூச்சிகளையும் இளம் பருவ புழுக்களையும் பிடித்து தின்பதால் இவைகளின் தாக்குதல்களில் இருந்து இயற்கையாகவே பயிர் பாதுகாக்கப்படுகிறது.

இரவில் குச்சிகளின் மேல் ஆந்தை அமர்ந்து எலியை பிடித்து தின்பதால் எலி தாக்குதலில் இருந்து பயிர்கள் பாதுகாக்கப்படுகிறது. பறவை குடிலுக்கு தென்னை மரத்தின் அடிமட்டைகளை பயன்படுத்தலாம்.மாலை ஆறு மணியளவில் தாம்பாளம் போன்ற அகல பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதில் சிறிது மண்ணெண்ணை, அத்துடன் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து மில்லி வீதம் மானோபுரொட்டோபாஸ் கலந்து வயல்களின் நடுவே உயரமான ஸ்டூல் அல்லது தட்டியினை வைத்து நடுவே ஒரு செங்கல் வைத்து பெட்ரோமாஸ் லைட் அல்லது காஸ் லைட் அல்லது அரிக்கன் லைட் வாய்ப்பு இருந்தால் மின் விளக்கு ஏதேனும் ஒன்றை பொருத்தில் இரவு எட்டு மணிக்கு எல்லாம் தாய் அந்துப்பூச்சிகளை சேகரித்து அளிக்க வேண்டும். இதனால் பூச்சிகள்

பயிரில் முட்டையிட்டு புழுக்கள் வெளிவந்து பயிர்கள் தாக்கப்படுவதை முன் கூட்டியே தடுக்கலாம்.பூச்சிகள் நடமாட்டத்தை அறிந்து முன்கூட்டியே நடவடிக்கையை தொடரலாம்.

சம்பா பயிரில் மழை மற்றும் குளிர் காலத்தில் இலைப்புள்ளி நோய், இலை கருகல் நோய், குளைநோய், மற்றும் நெல் பழ நோய் போன்றவை தாக்ககூடும். இதை தடுக்க நாற்றங்காலிலேயே ஐந்து மீட்டர் நீளம், நான்கு மீட்டர் அகலம் உள்ள பாத்தி தயார் செய்து, இதில் ஒரு கிலோ சூடோமோனாஸ் எதிர் நச்சுயிரை கரைத்து ஒரு ஏக்கர் நாற்றினை நினைத்த பிறகு நடவு செய்திட வேண்டும். நடவு வயலில் ஒரு கிலோ சூடோமோனோஸ்டன், பத்து கிலோ மக்கிய எருவை கலந்து பின்பு தூவவேண்டும்.இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் நடேசேன் தெரிவித்தார்.

**ஈரப்பதத்தை உயர்த்தி நெல் கொள்முதல் : காங்., விவசாய பிரிவு அரசுக்கு கடிதம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:21 IST

மன்னார்குடி: "தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஈரப்பதத்தை உயர்த்தி நெல் கொள்முதல் செய்ய வேண்டும்' என அரசுக்கு காங்கிரஸ் விவசாய பிரிவு பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு பொதுச் செயலாளர் நெடுவை ராஜதுரை தமிழக அரசுக்கு அனுப்பிய கோரிக்கை கடிதத்தில் கூறியதாவது: தமிழகத்தில் குறிப்பாக, டெல்டா பாசன பகுதிகளில் வழக்கம் போல் இந்தாண்டு காவிரி நீரை பெற்று ஆற்றுப் பாசனம் மூலம் விவசாய பணி நடந்து வருகிறது. குறுவை சாகுபடி முழுமையாக செய்ய முடியாத நிலை இருப்பினும் நூற்றுக்கணக்கான பம்புசெட் பாசனம் மூலம் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இயற்கையின் சூழலால் தற்போது தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

அறுவடை பணியும், மழைக்காலமும் ஒருங்கே துவங்கிவிட்டதால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதில் சிரமப்பட்டு வருகிறனர். எனவே, விவசாயிகளின் மேலான நலன் கருதி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், நெல் கொள்முதல் நிலையங்கள் உடனடியாக முழுமையாக திறந்து, மழைக்காலத்தை கருத்தில் கொண்டு 17 சதவிகித ஈரப்பதம் என்பதை உயர்த்தி 22 சதவீகிதமாக வரை கணக்கீடு செய்து, நிபந்ததையின்றி நெல் கொள்முதல் செய்ய வேண்டும். திறக்கப்படும் நெல் கொள்முதல் நிலையங்கள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மதுரை விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள் வாடகைக்கு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:54 IST

மதுரை:மதுரையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலமாக, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பது கடினமாக உள்ளது. நாற்றங்கால் நடவு செய்ய, களை எடுக்க, தண்ணீர் பாய்ச்ச, அறுவடை செய்ய, கதிர் அடிக்க என விவசாய பணிகளுக்கு தனித்தனி கூலி நிர்ணயித்து ஆட்களை வரவழைக்க வேண்டியுள்ளது. இதற்கும் ஆட்கள் கிடைப்பது அரிது. இதன் காரணமாகவும், விவசாயத்தை இயந்திர மயமாக்கும் பொருட்டும் நவீன வேளாண் கருவிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதன்படி, அதிக மகசூல் தரும் ராஜராஜன் 1000 நெல் சாகுபடியில் இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இதையடுத்து விவசாய பணிகளுக்கு தேவையான வேளாண் கருவிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.வாடகைக்கு பெறுவது எப்படி?:மதுரை விற்பனைக்குழு செயலாளர் கா.பாஸ்கரராஜ் கூறும்போது, ""வேளாண் கருவிகளை வாடகைக்கு பெற விரும்பும் விவசாயிகள் முன் வைப்பு தொகையாக கருவியின் மதிப்பில் ஐந்து சதவீத தொகையை ""செயலாளர், மதுரை விற்பனைக்குழு, மதுரை'' என்ற பெயரில் வங்கி டி.டி., மூலமாக சம்மந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலகத்தில் செலுத்தி, கருவிகளை வாடகைக்கு எடுக்கலாம்.

எடுத்து செல்லப்படும் கருவிகளை பழுது இன்றி திரும்ப ஒப்படைத்து, விவசாயிகளால் டி.டி.,யை திரும்ப பெறலாம்,'' என்றார்.யாரை தொடர்பு கொள்ளலாம்?:மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் (நெல் வணிக வளாகம்), பொறுப்பாளர் ராணி (போன் 0452 258 0379, 98944
42348), ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் விடத்தகுளம் ரோடு, திருமங்கலம், பொறுப்பாளர்கள் செபஸ்டினா, ஹேமாவதி (0452 280 731, 95007 58788), ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மதுரை ரோடு, உசிலம்பட்டி, பொறுப்பாளர் சிவக்குமார் 04552 251 070, 95434 75854) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மதுரையில் இரண்டாம் போக விவசாய பணிகள் நடப்பதால் நவீன வேளாண் கருவிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் நலன் கருதி தேவையான கருவிகளை வழங்க கலெக்டர் சி. காமராஜ் உத்தரவிட்டுள்ளார்.

**நெல்லி, எலுமிச்சை சாகுபடிவிவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,23:24 IST

தேனி:நெல்லி, எலுமிச்சை, மாதுளை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.தேனி மாவட்டத்தில் சப்போட்டா, மா, நெல்லி, எலுமிச்சை, மாதுளை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை அதிகளவு மானிய உதவிகள் வழங்கி வருகிறது. ஆனால்

சப்போட்டா, மா சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இந்த பழங்களுக்கு சேமிப்பு வசதிகளும், விற்பனை வசதிகளும் இல்லை. விளைபொருட்களுக்கு விலையும் கிடைப்பதில்லை.ஆனால் நெல்லி, எலுமிச்சை, மாதுளைக்கு நல்ல மார்க்கெட் வசதி உள்ளது. இவற்றிக்கு அதிகளவு விலை கிடைப்பதோடு, விற்பனை வசதிகளும் உள்ளன. இவற்றை சேமிப்பதிலும் பிரச்னை இல்லை. எனவே சமீப காலமாக மா, சப்போட்டா சாகுபடி செய்த விவசாயிகள் கூட நெல்லி, மாதுளை, எலுமிச்சை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

**நீண்ட காது உள்ள அதிசய ஆடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,20:56 IST

முதுகுளத்தூர்:முதுகுளத்தூரில் இரண்டு அடி நீளமுள்ள அதிசய ஆட்டை ஏராளமானோர் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர். பொதுவாக மலை பிரதேசங்களில் வாழும் ஆடுகளுக்கு, நாட்டு ஆடுகள் எனப்படும் தென் தமிழகத்தில் காணப்படும் ஆடுகளை விட காது சற்று பெரிதாக இருக்கும். ஆனால் முதுகுளத்தூரில் நாட்டு ஆட்டிற்கே இரண்டு அடி நீளத்தில் காது உள்ளதால், பொதுமக்கள் வியப்போடு பார்த்து செல்கின்றனர்.

**பயிர் காப்பீடு செய்யஅஞ்சும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,22:54 IST

திருப்புத்தூர்:பயிர் காப்பீடு தொகை கிடைக்காததால், திருப்புத்தூரில் பயிர்களை காப்பீடு செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.திருப்புத்தூர் ஒன்றியத்தில் கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்துள்ளது. இந்த மழையின் மூலம் விவசாயிகள் நடவு பணியில் இறங்கியுள்ளனர். இருப்பினும், அறுவடை வரை தேவைப்படும் தண்ணீர் கண்மாய்களில் சேகரமாகவில்லை. இதனால், விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதே நேரம் கடந்த ஆண்டு கட்டிய பிரீமிய தொகைக்கான காப்பீடு தொகையை கிடைக்காததால், நடப்பாண்டு காப்பீடு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. திருப்புத்தூரில் கடந்தாண்டு 1000 ஏக்கர்விவசாயிகள் பயிர்காப்பீடு செய்தனர். ஏக்கருக்கு 106 ரூபாய் பிரீமிய தொகை கட்டினர். கடந்த ஆண்டு விளைச்சல் பாதித்ததால், காப்பீடு தொகை கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால் ஒரு ஆண்டுகளாகியும் காப்பீடு தொகை கிடைக்கவில்லை. இதனால், விவசாயிகள் காப்பீடு செய்ய தயங்குகின்றனர்.இது குறித்து விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,ஆண்டு துவக்கத்திலேயே மகசூல் விபரங்களைபயிர் காப்பீடு அலுவலகத்திற்கு வழங்கிவிட்டோம். ஆனால் காப்பீடு தொகை வரவில்லை என்றார்.

**நெல் பயிரிட மானியவிலையில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,21:37 IST

விருதுநகர்:விருதுநகர் வேளாண்மை உதவி இயக்குனரின் செய்திக்குறிப்பு:விருதுநகர் வட்டாரத்தில் தற்போது பெய்துள்ள மழையினைக் கொண்டும், வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கியும் பரவலாக நெல் பயிரிட நாற்றங்காலை விவசாயிகள் தயார் செய்து வருகின்றனர். தண்ணீர் வசதியுள்ள இடங்களில் ராஜராஜன் 1000 சாகுபடி முறையினை பின்பற்றி அதிக மகசூல் பெறலாம்.ஒரு ஏக்கருக்குத் தேவையான 3 கிலோ நெல் விதையினை 1 சென்ட் நாற்றங்காலில் மேட்டுப் பாத்தி அமைத்து 2 வாரங்களில் நாற்றினைப் பிடுங்கிட வேண்டும்.

**நெல் பயிரிட மானியவிலையில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,21:37 IST

விருதுநகர்:விருதுநகர் வேளாண்மை உதவி இயக்குனரின் செய்திக்குறிப்பு:விருதுநகர் வட்டாரத்தில் தற்போது பெய்துள்ள மழையினைக் கொண்டும், வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கியும் பரவலாக நெல் பயிரிட நாற்றங்காலை விவசாயிகள் தயார் செய்து வருகின்றனர். தண்ணீர் வசதியுள்ள இடங்களில் ராஜராஜன் 1000 சாகுபடி முறையினை பின்பற்றி அதிக மகசூல் பெறலாம்.ஒரு ஏக்கருக்குத் தேவையான 3 கிலோ நெல் விதையினை 1 சென்ட் நாற்றங்காலில் மேட்டுப் பாத்தி அமைத்து 2 வாரங்களில் நாற்றினைப் பிடுங்கிட வேண்டும்.

நடவு செய்த 10 ம் நாளிலிருந்து 10 நாட்கள் இடைவெளியில் 4 முறை கோனோவீடர் என்ற களை எடுக்கும் கருவி கொண்டு களை எடுக்கவேண்டும்.இந்த முறையைப் பின்பற்றுவதன் மூலம் குறைந்த பட்சம் 15 சதம் கூடுதல் மகசூல் பெறலாம்.ராஜராஜன் 1000 என்ற சாகுபடி முறையினை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தும் வகையில் தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. எனவே விருதுநகர் வட்டார விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகி தெரிந்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**அடர் நடவு மா சாகுபடி முறை துணை இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:22 IST

தர்மபுரி: பென்னாகரம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள அடர் நடவு மாந்தோட்டங்களை தோட்டக்கலை துணை இயக்குனர் ஆய்வு செய்தார்.தர்மபுரி மாவட்டம் பென்னாகரம்

தாலுகாவில் தோட்டக்கலை துறை சார்பில் மா சாகுபடியில் அடர்வு நடவு புதிய தொழில்நுட்ப முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்ப முறையில் விவசாயிகள் அப்பகுதியில் 45 ஹெக்டேரில் அடர் நடவு முறையில் மா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். சாகுபடி நிலத்தில் பத்து மீட்டர் இடைவெளி விட்டு மாங்கன்றுகள் நடவு செய்துள்ளனர். இவற்றை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம் அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தார்.

அவர் விவசாயிகளுடன் கலந்துரையாடி, அதிக மகசூல் பெறுவதற்கு சாகுபடி அறிவுரை வழங்கினார். அப்போது அவர் கூறியதாவது: விவசாயிகளுக்கு மா சாகுபடியில் அதிக வருமானம் பெறுவதற்கு அடர் நடவு முறையை மேற்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கரில் 160 கன்றுகளை, வரிசைக்கு வரிசை, கன்றுக்கு கன்று பத்து மீட்டர் இடைவெளி விட்டு நட வேண்டும். இதன் மூலம் நீர் பாசனத்தில் தண்ணீர் மிச்சமாவதோடு அதிக மகசூல் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. தற்போது மாவட்டத்தில் ஒரளவு நல்ல மழை பெய்துள்ளது. மா சாகுபடிக்கு தகுந்த சூழ்நிலை நிலவுகிறது. இவற்றை பயன்படுத்தி விவசாயிகள் மா சாகுபடியில் அதிகளவில் ஈடுபட்டு உற்பத்தியை பெருக்க வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.அதன்பின் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பென்னாகரம் தோட்டக்கலை துறை சார்பில் மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கினார்.ஆய்வின்போது, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர்கள் முருகன், முகுந்தன், பென்னாகரம் உதவி வேளாண்மை அலுவலர் பழனி, மற்றும் பலர் உடன் இருந்தனர்.

**மானாவாரி நிலங்கள் வீட்டுமனைகளாகிறது: எண்ணெய் வித்துகள் சாகுபடி : குறையும் அபாயம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,02:02 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டார பகுதியில் உள்ள பெருவாரியான மானாவாரி நிலங்கள், வீட்டுமனைகளாக மாறி வருகிறது. இதனால் நிலக்கடலை, எள் உள்ளிட்ட எண்ணை வித்துகள் சாகுபடி பெருமளவில் குறையும் அபாயம் உள்ளது.கோபியை அடுத்த சிறுவலூர், கொளப்பலூர், வேட்டைகாரன் கோயில், கடத்தூர், குருமந்தூர், வெள்ளாங்கோயில் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் ஆடிபட்டத்தில் மானாவாரி நிலங்களில் நிலக்கடலை, எள் உள்ளிட்ட எண்ணை வித்துகள் பயிரிடப்படுகிறது. குறிப்பாக நிலக்கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழையை நம்பியே மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

இரண்டு ஆண்டாக கோபி வட்டாரத்தில் மானாவாரி நிலங்கள் அதிகம் உள்ள பகுதியில் மழை பெய்யவில்லை. இதனால் நிலக்கடலை உற்பத்தி படிப்படியாக குறைந்து வருகிறது. மழையை எதிர்பார்த்து, நிலக்கடலை பயிரிட்டாலும், மழை தவறும் பட்சத்தில் விவசாயிகள் பெரும்

நஷ்டத்தை அடைகின்றனர். இதனால் இரண்டு ஆண்டாக ஆடிபட்டத்தில் நிலக்கடலை சாகுபடியை செய்ய பெரும்பாலான விவசாயிகள் முன்வரவில்லை. நிலக்கடலை உற்பத்தி குறைவால் கடந்த சீஸனில் நிலக்கடலை விதைக்கு கூட தட்டுப்பாடு ஏற்பட்டது.

கோபி வட்டார பகுதியில் நடப்பாண்டு ஓரளவுக்கு மழை பெய்துள்ளது. இதனால் சில பகுதிகளில் மானாவாரி நிலங்களில் நிலக்கடலை பயிரிடப்பட்டு அறுவடை தொடங்கியுள்ளது. ஆனால் பெரும்பாலான மானாவாரி நிலங்கள், வீட்டுமனைகளாக பிரித்து போடப்பட்டு விற்பனைக்கு தயாராக உள்ளது. அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் நெல், கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களைதான் விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர். ஆண்டு முழுவதும் வாய்க்கால் மூலம் தண்ணீர் கிடைக்கும் பாசன பகுதிகளில் நிலக்கடலை சாகுபடி செய்ய விவசாயிகள் விரும்புவது இல்லை.கோபி வட்டாரத்தை பொறுத்தவரை நிலக்கடலை சாகுபடி அதிகளவில் மானாவாரி நிலங்களில்தான் பயிரிடப்படும் என்ற நிலை உள்ளது. ஆனால் சமீப காலமாக மானாவாரி நிலங்கள் வீட்டு மனைகளாக உருமாறி வருகிற பட்சத்தில், எதிர்காலத்தில் கோபி பகுதியில் நிலக்கடலை உற்பத்தி வெகுவாக குறைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

**பருத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:59 IST

ஈரோடு: "பருத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்க செய்ய வேண்டும்' என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி கூறினார்.மேலும் அவர் கூறியதாவது: இரண்டு லட்சம் விவசாய பம்பு செட்களுக்கு புதிய மின் இணைப்பு கொடுப்பதாக தமிழக முதல்வர் கூறியுள்ளது பாராட்டுக்குரியது. இணைப்பு என்பது எங்களுடைய உரிமை. நீண்ட நாட்களாக இந்த கோரிக்கையை நாங்கள் வைத்திருந்தோம். அதேசமயம் விவசாயிகளுக்கு மின் மோட்டார் கொடுப்பது, எங்களுக்கு போடப்படும் பிச்சையாகவே கருதுகிறோம். இதை நாங்கள் கேட்கவில்லை.

பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் என்பது நியாயமல்ல. அரசியல் கட்சிகள் ஆலை நிர்வாகத்துக்கு துணை போவதை கண்டிக்கிறோம். கோவை மாவட்டத்தில் ஏராளமான பஞ்சாலைகள் இருந்தன. பருத்தி சாகுபடிக்காகவே கீழ்பவானி பாசன திட்டம் கொண்டு வரப்பட்டது. தற்போது பருத்தியை கண்டுபிடிப்பது அரிதாகி விட்டது. இதற்கான காரணங்களை கண்டறிந்தால் பிரச்னை வந்திருக்காது. விவசாய விளைபொருட்கள் ஏற்றுமதி தடை என்பது

தேசிய அவமானம். எனவே, பருத்தி சாகுபடி பரப்பளவை அதிகப்படுத்த அரசு முயற்சிக்க வேண்டும். பருத்தி தட்டுப்பாடு தீர இதுவே வழி. இவ்வாறு அவர் கூறினார்.

**பவானிசாகர் பகுதியில் மஞ்சள் சாகுபடி அமோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:57 IST

டி.என்.பாளையம்: டி.என்.பாளையம் மற்றும் பவானிசாகர் பகுதியில் மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மஞ்சள் விலை உச்சியை தொட்டு நிற்கிறது. குவிண்டால் 14 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலை கிடைப்பதால் மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். சென்ற ஆண்டை விட இந்தாண்டு அதிக அளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுவதாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மஞ்சள் உற்பத்தியில் நல்ல வருமானம் பெற முடியும் என்பது இன்றைய விவசாயிகளின் மனதில் ஆழமாய் பதிந்து விட்டது. மஞ்சள் நல்ல விளைச்சலையும், விலையையும் தரக்கூடிய ஒரு பயிர். வைகாசி-மாசி மாதங்கள்தான் மஞ்சள் சீஸன். மஞ்சள் பத்து மாதப்பயிர். விதை மஞ்சள் ஒரு ஏக்கருக்கு 750 முதல் 800 கிலோ வரை சாகுபடி செய்ய முடியும். ஒரு கிலோ விதை மஞ்சள் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இடு பொருட்கள் மற்றும் வெட்டுக் கூலி அனைத்தும் சேர்த்து மஞ்சள் நடவுச் செலவு ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சமாகிறது.

மஞ்சள் அறுவடை முடிந்த பிறகு வேகவைத்து பாலிஷ் செய்ய 75 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு 50 ரூபாய் செலவாகிறது. இப்படியாக விளைவிக்கப்படும் மஞ்சளுக்கு நல்ல வரவேற்புள்ளது. குவிண்டால் 14 ஆயிரம் ரூபாய்க்கும் மேல் விற்கப்படுவதால், நல்ல வருமானத்தை பெற முடியும் என்ற நம்பிக்கையில் அதிகளவில் விவசாயிகள் பயிரிடுகின்றனர். பவானிசாகர் யூனியனில் சென்ற ஆண்டு 35 எக்டராக இருந்த மஞ்சள் சாகுபடி இந்தாண்டு 140 எக்டராக உயர்ந்துள்ளது. டி.என்.பாளையம் யூனியனில் சென்ற ஆண்டை விட இந்தாண்டு 540 ஹெக்டேராக அதிகரித்துள்ளது. மஞ்சள் பயிருக்கு மாபெரும் எதிரியாய் உள்ளது இலைப்புள்ளி நோய். இந்நோய் மஞ்சள் பயிரைத் தாக்கினால் மஞ்சள் இலைகள் சருகுகளாய்க் காய்ந்து விடுகிறது. இதனால் விளைச்சல் பல மடங்காய் குறைகிறது. இலைப் புள்ளி நோய்த் தாக்குதலால் நஷ்டப்படும் விவசாயிகள் ஏராளமானோர், இதை கட்டுப்படுத்த பாவிஸ்டின் மருந்து தெளித்தால் போதும் என்கின்றனர் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள்.

**ரூ. 73 லட்சத்தில் விவசாயிகளுக்கு மானியத்துடன் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,22:33 IST

பேரூர் : தேசிய தோட்டக்கலை இயக்ககத்தில், விவசாயிகளுக்கு மானியத்துடன் இடுபொருட்கள் வழங்க 73 லட் சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில், 2010- 11ம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்ககம் மூலமாக, கோகோ, மா, திசுவாழை போன்ற பயிர்களில் புதிய பரப்பு கொண்டு வருதல் மற்றும் வாழை, மிளகாய், மஞ்சள், உதிரிமலர்கள் போன்ற பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு முழுமானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன.இதுதவிர, பசுமைக்குடில் அமைத்தல், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல், தேனீப்பெட்டிகள் வழங்குதல் போன்றவைகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. இதுகுறித்து, தோட்டக்
கலைத்துறை உதவி இயக்குனர் ராஜாமணி கூறுகையில், ""2010-11ம் ஆண்டில், இத்திட்டத்துக்காக அரசு மானியத்துடன், 73 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

""தற்போது வெங்காய அறுவடை முடிந்து, மஞ்சள் பயிர் வயலில் வளர்ச்சி நிலையில் உள்ளதால், மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 150 எக்டர் பரப்பளவுக்கு, 25.35 லட்சம் ரூபாய் மதிப்பில், இயற்கை உரம், நீரில் கரையும் உரம், உயிர் உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் என, விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன," என்றார்.

**வடக்கு உழவர் சந்தையில் 95 டன் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,22:28 IST

திருப்பூர் : திருப்பூர் வடக்கு உழவர்சந்தையில் கடந்த சனிக்கிழமை ஆயுதபூஜையன்று காய்கறி விற்பனை அதிகளவில் இருந்தது.வழக்கமாக சந்தைக்கு 170 முதல் 180 விவசாயிகள், 7,000 நுகர்வோர் வருவர்; சராசரியாக 55 முதல் 60 டன் காய்கறி விற்பனை நடக்கும். நேற்று முன்தினம் 226 விவசாயிகள், 16 ஆயிரம் நுகர்வோர் வந்தனர்; காய்கறி விற்பனை 95 டன்னாக இருந்தது. இந்த அளவுக்கு இதுவரை விற்பனை நடந்ததில்லை.மாலைநேர உழவர் சந்தையிலும் விற்பனை அதிகரித்திருந்தது. விவசாயிகளின் எண்ணிக்கை 23ல் இருந்து 40 ஆக உயர்ந்திருந்தது. காய்கறி வரத்து ஆறு டன்னில் இருந்து 15 டன்னாக அதிகரித்தது. நேற்று, வழக்கம் போல் விற்பனை நடந்தது.

**காய்கறிகள் விலை அதிகரிப்பால் வாடும் மக்கள்! : உணவு தின கருத்தரங்கில் கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,22:11 IST

குன்னூர் : "காய்கறிகளின் விலை இரண்டு சதவீதம் அதிகரிக்கும் போது, ஒரு கோடி மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் தள்ளப்படுகின்றனர்' என, கருத்தரங்கில் கவலை தெரிவிக்கப்பட்டது.அருவங்காடு கார்டைட் தொழிற்சாலை மேல்நிலைப் பள்ளியில், உலக உணவு தின சிறப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது. என்.எஸ்.எஸ்., திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார்.

தேசிய பசுமைப்படை திட்ட மாவட்ட முதன்மை பயிற்றுனர் ஆசிரியர் ராஜு, சிறப்பு விருந்தினராக பேசியதாவது: புவி வெப்பமயமாதல், சுருங்கி வரும் விவசாய நிலங்கள், விவசாயப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காதது, அதிகரித்து வரும் விவசாய இடுபொருட்களின் விலை உட்பட பல காரணங்களால் விவசாய உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், விவசாயத் தொழிலை விட்டு வேறு தொழிலை நாடி நகர்புறங்களுக்கு செல்கின்றனர். விளைவாக, உணவு தானிய உற்பத்தி பெருமளவு குறைந்துள்ளது.உலகளவில் 85.20 கோடி மக்கள் கடும் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றனர்; 200 கோடி மக்களின் உணவுத் தேவையில் பாதுகாப்பற்ற சூழ்நிலை காணப்படுகிறது; ஆண்டுதோறும் 60 லட்சம் குழந்தைகள் பசியால் இறக்கின்றனர்; தினமும் 17 ஆயிரம் குழந்தைகள், பசியால் மடிகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

இந்தியாவில் 3 கோடி மக்கள் பசியால் வாடிக் கொண்டிருக்கின்றனர்; 46 சதவீத குழந்தைகள், குறைந்த எடையுடன், ஊட்டச்சத்து குறைவுடன் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர். நம் நாட்டில் உள்ள 5 குழந்தைகளில் 3 பேர் ஊட்டச்சத்து குறைவால் அவதிப்படுகின்றனர். இந்தியாவை பொறுத்தவரை, மத்தியப் பிரதேசம், பீகார், சட்டீஸ்கர் உட்பட மாநிலங்களில், ஊட்டச்சத்து குறைபாடு அதிகம் உள்ளது.புவி வெப்பமயமாதல், நீர் பற்றாக்குறை, விவசாய நில பாதிப்பு, பூமி பாலைவனமாக மாறுதல், கடல்மட்டம் உயர்தல், அதிகரிக்கும் புயல், வறட்சி என பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இத்தகைய பல காரணங்களால், ஒரு மனிதனுக்கு கிடைக்கும் சராசரி உணவின் அளவு, கடந்த 10 ஆண்டுகளில் 156 கிராம் குறைந்துள்ளது.

உணவு தானியங்கள், காய்கறிகளின் உற்பத்தி குறைவால், அவற்றின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளன. காய்கறிகளின் விலை 2 சதவீதம் அதிகரிக்கும் போது, ஒரு கோடி மக்கள் வறுமை கோட்டுக்கு கீழ் தள்ளப்படுகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் தலையீட்டால், திசு மாற்று உணவுப் பொருட்கள் அதிகரித்துள்ள நிலையில்,

உள்ளூர் உணவுப் பொருட்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாயத் துறை மீது அரசு கவனம் செலுத்த வேண்டும்; இதுகுறித்த விழிப்புணர்வை, மாணவர்கள் பெற வேண்டும்.இவ்வாறு, ஆசிரியர் ராஜு பேசினார். பள்ளி முதல்வர் லெனின் தலைமை வகித்தார். மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர். ஆசிரியர் ஜெயப்பிரகாஷ் நன்றி கூறினார்.

**பயிர் கடன் ரூ.70 லட்சம் வழங்க குறியீடு நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2010,02:25 IST

மஞ்சூர்:"மஞ்சூரில் 60 லட்சம் ரூபாய் மதிப்புக்கு கடன் கேட்ட ஏராளமான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது,' என உறுப்பினர்கள் கல்வி திட்ட நிகழ்ச்சியில் அதிகாரிகள் தெரிவித்தனர்.மஞ்சூரில் உள்ள குந்தா தொடக்க வேளாண்மை கடன் சங்கம் சார்பில் உறுப்பினர்கள் கல்வி திட்டம் மற்றும் கடன் வசூல் மையம் குறித்தான கூட்டம் மஞ்சூர் எச்.கே.,டிரஸ்ட் கட்டடத்தில் நடந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டுறவு துறை அதிகாரிகள் குந்தா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து பேசிய விபரங்கள்:குந்தா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 1000க்கு மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

பயிர் கடன், கூட்டு பொறுப்பு குழு கடன், நகை கடன் என இது வரை வங்கி சார்பில் 1.62 கோடி வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் பங்குதொகை 33 லட்சம் ரூபாய் உள்ளது. பயிர் கடன் 70 லட்சம் ரூபாய் வரைதான் வங்கிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் 90 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. வட்டி இல்லாத கடனும் கொடுக்கப்படுகிறது. கூட்டு பொறுப்பு குழு கடனாக 20 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான உறுப்பினர்கள் பெற்ற கடனை புதுபித்துள்ளனர். 3.80 லட்சம் கடன் மட்டும் நிலுவையில் உள்ளது. ஏராளமான உறுப்பினர்கள் சுமார் 60 லட்சம் ரூபாய் வரை கடனுக்காக விண்ணப்பம் அளித்துள்ளனர். விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.இதன்பின், உறுப்பினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு மண்டல இணைப்பதிவாளர் விளக்கமளித்தார். இதில், குந்தா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர் ரத்தினா வரவேற்றார். நீலகிரி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன் தலைமை வகித்தார். நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் விஸ்வநாதன், தனி அலுவலர் சிவா முன்னிலை வகித்தனர்.

**"பால் கொள்முதல் விலை உயர்த்தணும்' விவசாய தொழிலாளர் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,01:28 IST

கரூர்: தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம், கரூர் மாவட்டக்குழு கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கரூர் மாவட்ட அலுவலகத்தில் நடந்தது.மாவட்ட பொருளாளர் மணி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பெரியசாமி துவக்கி வைத்து, இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார். மாநில செயலாளர் பெரியசாமி மாநிலக்குழு முடிவுகளை விளக்கினார். மாவட்ட செயலாளர் தங்கவேல் வேலையறிக்கை வாசித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: குடியிருப்பு வீட்டுக்கு மனை பட்டாவும், வீட்டுமனை இல்லாத அனைவருக்கும் இலவச வீட்டுமனையும் வழங்க வேண்டும். செப்டம்பர் 13ம் தேதி வீட்டுமனை, பட்டா வேண்டி கலெக்டரிடம் மனுகொடுத்ததன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் நிலப்பரப்பை அதிகப்படுத்தி, 3 செண்ட் நிலம் ஒதுக்கி, குறைந்தபட்ச அடிப்படை வசதி கொண்ட 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான வீடு கட்டி கொடுக்க வேண்டும். இந்த திட்டத்தை கிராமப்புறம் மட்டுமின்றி நகர்புறம், டவுன் பஞ்சாயத்துகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.விவசாய தொழிலாளிகளுக்கு இலவசமாக கொசுவலை வழங்க வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் வேலை செய்யும் பணியாளர்களுக்கு ஒரு நாள் ஊதியம் 150 ரூபாயாக உயர்த்தியும், 200 நாள் வேலை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோவிந்தராஜன் கமிட்டி அறிவித்துள்ள கல்வி கட்டணம் பொதுமக்களுக்கு தெரியும் வகையில் தனியார் பள்ளி அறிவிப்பு பலகையில் வைக்க வேண்டும். கலெக்டர் அலுவலகம், தாலுகா அலுவலகம், மாவட்ட, தாலுகா கல்வி அலுவலகங்களில் எழுதிவைக்க வேண்டும். கமிட்டி அறிவித்துள்ள தொகையை விட அதிகம் வசூலிக்கும் கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு மற்றும் தனியார் பஸ்களில் அறிவிக்கப்படாத பஸ் கட்டணத்தை ரத்து செய்து பழைய முறைப்படி கட்டணம் வசூலிக்க வேண்டும். கோவில் நிலம் விற்று வீட்டுமனையாக மாற்றுவதை தவிர்க்க வேண்டும். மாட்டு தீவன விற்பனை பல மடங்கு, பலமுறை உயர்ந்தும் அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்தாமல் உள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு பால்விலையை உடனடியாக உயர்த்தி வழங்க வேண்டும்.

**வேளாண் துணை இயக்குனர் நீர்வடி பகுதிகளில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,02:36 IST

நாமக்கல்: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு பணிகளை, வேளாண் துணை இயக்குனர் முரளி ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அத்திட்டத்தின் கீழ் 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலத்தொடர் தொகுப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. திருச்செங்கோடு வட்டாரத்தில் ஆனங்கூர் பழையபாளையம் மற்றும் சின்ன ஆனங்கூர், எலச்சிபாளையம் வட்டாரத்தில் மாவுரெட்டிப்பட்டி மற்றும் பரமத்தி வட்டாரத்தில் வில்லிபாளையம் ஆகிய கிராமங்களில் 48.49 லட்சம் ரூபாய் மதிப்பில் நடந்து வருகிறது. அப்பணிகளை சென்னை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி வேளாண் இணை இயக்குனர் முரளி ஆய்வு செய்தார். அப்போது நிலத்தொகுப்புகளில் இலவசமாக அமைக்கப்பட்டுள்ள 15 ஆழ்துளை குழாய் கிணறுகள் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்களை ஆய்வு செய்து, விரைவில் அரசாணைப்படி இலவச மின் இணைப்பு பெற அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

தரமான மா, சபோட்டா, நெல்லி போன்ற பழக்கன்றுகளை கொள்முதல் செய்து பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்களான 3க்கு 3 அளவுள்ள குழிகள் எடுத்து, அசோஸ்பைரில்லம், சூடோமோனாஸ், தொழுஉரம், நுண்ணூட்டக்கலவை போன்றவை தேவையான அளவு இட்டு பழக்கன்றுகள் நடவு செய்ய ஆலோசனை வழங்கினார். இப்பகுதியில் உள்ள நிலங்களில் நிலக்கடலை, ஆமணக்கு, பயறுவகைககள், தீவனச்சோளம் போன்றவற்றை ஊடுபயிராக பயிரிட்டு அதிக மகசூல் பெற தக்க தொழில்நுட்பங்களை பின்பற்றவும் ஆலோசனை வழங்கினார். ஆய்வின் போது, நடவு வல்லுனர் குணசேகரன், உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, சமூகவியலர் மணிவாசகன், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட பொருளியலர் நாகராஜன், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள், வேளாண் அலுவலர்கள், சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் பாசன நீர் திறக்க விவசாயிகள் மனு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2010,02:06 IST

ஈரோடு: குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் அணைகளில் இருந்து, பாசனத்துக்கு தண்ணீர் திறக்க கலெக்டரிடம் கோரப்பட்டுள்ளது.தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தலைவர் முத்துசாமி, செயலாளர் முனுசாமி, பொருளாளர் முத்து பழனிசாமி ஆகியோர், ஈரோடு மாவட்ட கலெக்டர் சவுண்டையாவிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: கோபி தாலுகா குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 42 அடி. செப்., 22ம் தேதி இரவு பெய்த மழையால் ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 36 அடியாக உயர்ந்தது. அக்., 2, 3 ஆகிய தேதியில் பெய்த கன மழையால் அணை நிரம்பி தண்ணீர் வெளியேறியது. ஓடையோரமாக இருந்த விவசாய கிணறுகள்,

மோட்டார் பம்பு செட்டுகள், ஆயில் இன்ஜின்கள், தென்னை மரம், வாழை மரங்கள் ஆகியவை நாசமாகின. கொங்கர்பாளையம் உள்ளிட்ட பகுதியில் விவசாயமே செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சத்தி தாலுகா பெரும்பள்ளம் பகுதியில் பெய்த மழையால் புள்ளப்ப நாயக்கன் பாளையம், கெம்பநாயக்கன் பாளையம் பகுதியில் கிணற்று சுற்றுச்சுவர் இடிந்து மோட்டார் பம்பு செட் மூடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நிலங்கள், கிணறுகளை ஆய்வு செய்து, நிவாரணம் வழங்க வேண்டும். குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் அணைகளில்  இருந்து, உரிய நேரத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கவும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

**தோட்டக்கலை பணியாளர் சங்க மாநில பொதுக்குழு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2010,02:25 IST

வேலூர்: வேலூர் அடுத்த சத்துவாச்சாரியில் தமிழ்நாடு அரசு தோட்டக் கலை பணியாளர்கள் சங்கம் மாநில பொதுக்குழு கூட்டம் நடந்தது.மாவட்ட நிர்வாகி ஜெயபால் தலைமை வகித்தார். மாநில கவுரவத்தலைவர் ராஜ வேலு துவக்கி வைத்தார். மாநில தலைவர் செல்வமணி, பொதுச் செயலாளர் சுப்பிரமணியன், துணைத் தலைவர் ரமேஷ், பொருளாளர் கோபிநாத், மாநில ஆலோசகர் மணி, மாவட்ட தலைவர் தாண்டவமூர்த்தி, செயலாளர் சந்திரன் ஆகியோர் கோரிக்கை குறித்து பேசினர். "பணியின் போது இறக்கும் தோட்டக்கலை தொழிலாளர்கள் குடும்பத்துக்கு ஒரு லட்ச ரூபாய் வழங்க வேண்டும், தீபாவளி, பொங்கலுக்கு இலவச சீருடை வழங்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

**சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன் பெற விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,00:59 IST

சிதம்பரம் : அரசு மானிய உதவியுடன் சொட்டுநீர் பாசனம் அமைத்து கூடுதல் மகசூல் பெற விவசாயிகளுக்கு வேளாண் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

கீரப்பாளையம் தோட் டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கீரப்பாளையம் வட்டத் தில் தோட்டக்கலைத் துறை மூலம் துல்லிய பண் ணையம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாய சொட்டுநீர் பாசனக் கருவிகள் அமைப்பதற்கு தோட் டக்கலைத் துறை மூலம் 65 சதவீதம், எக்டருக்கு 48 ஆயிரத்து 640 ரூபாய்

மானியம் வழங்கப்படுகிறது. கீரப்பாளையம் வட்டாரத்தில் ஆயிப்பேட்டை, அள்ளூர், கானூர், காவாலக்குடி, கூடலையாத்தூர், சோழத்தரம், அண்ணா நகர், நந்தீஸ்வரமங்கலம் ஆகிய கிராமங்களில் துல் லிய பண்ணையம் அமைக்கப்பட்டுள்ளது.

துல்லிய பண்ணையம் திட்ட விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு கீரப்பாளையம் வட்டாரத்தில் உள்ள நந்தீஸ்வரமங்கலம், முடிகண்டநல்லூர், பேரூர், சாக்கான்குடி, பாளையங்கோட்டை மேல்பாதி ஆகிய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப் பட்டுள்ளது. சொட்டுநீர் பாசனம் அமைத்து காய்கறிகள், வாழை, மரவள்ளி, முருங்கை, தர்பூசணி, மிளகாய் ஆகியவை சாகுபடி செய்யும்போது கூடுதல் மகசூல் கிடைப்பதால் அதிக லாபம் கிடைக்கிறது. சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் கீரப்பாளையம் வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை அணுகி விவரம் பெற்று பயனடையலாம்.

**"எள்' அறுவடை செய்யும் நேர்த்தி முறைகள் வேளாண் துறை அதிகாரிகள் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,01:04 IST

சிறுபாக்கம் : "எள்' அறுவடை நேர்த்தி செய்யும் முறைகள் குறித்து வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்) தனவேல், விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: எண்ணெய்வித்து பயிரான எள், எண்ணெய் அளவு குறையாமலும் தரம் கெடாமலும் காத்திட வேண்டும். எள் பயிர் அறுவடையின் போது செடியின் கீழ் பகுதியிலுள்ள இலைகளில் 25 சதவீதம் இலைகள் உதிர்ந்தும், மேலே உள்ள இலைகள் மற்றும் தண்டுப் பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறியிருக்க வேண்டும்.

எள் காய்கள் பாதியளவு மஞ்சள் நிறம் அடைந்து விட்டால் பயிர் அறுவடை செய்திட ஏற்ற பருவமாகும். எள் பயிரின் கீழ் பகுதியிலிருந்து 10வது காயை உடைத்துப் பார்த்தால் உள்ளே இருக்கும் விதைகள் கருப்பு நிறமாக மாறியிருந்தால் அறுவடை செய்து விடலாம். (இது கருப்பு எள் விதைக்கு மட்டும் பொருந் தும்) வெள்ளை எள் பயிருக்கு எள் விதை வெள்ளை நிறம் அடைய வேண்டும். மேலே கூறிய நிலையைத் தாண்டி அறுவடை செய்தால் எள் காய்கள் வெடித்து விதைகள் சிதறி சேதமடையும்.

எள் பயிரை தரை மட்டத்தில் அறுத்து எடுக்க வேண்டும். செடியின் மேல் பகுதியை உள்புறமும், அடிப்பாகம், வெளிப் புறமும் இருக்கும்படி வைத்து வட்ட வடிவமாக திறந்த வெளியில் அடுக்கி

வைக்க வேண்டும். அடுக்கிய எள் செடியில் உள்ள காய்கள் ஒட்டு மொத்தமாக முதிர்ச்சியடைய மேல் பகுதியில் வைக்கோல் போட்டு மூடி வைக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு பிறகு எள் பயிரை எடுத்து களத்தில் காய வைக்க வேண்டும். மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை காய வைத்த பின் விதைகளை தனியே பிரித்து எடுக்க வேண்டும்.

பிரிக்கப்பட்ட எள் விதைகளில் கலந்துள்ள கல், மண், இலை சருகுகள், சுருங்கிய மற்றும் முதிராத விதைகள், பழுதுபட்ட விதைகள் ஆகியவற்றை தனித்தனியே பிரித்தெடுக்க வேண்டும். காய்ந்த எள் விதையின் ஈரப்பதம் ஐந்து முதல் ஒன்பது சதவீதம் இருந்தால் தரமான எள் விதையாகும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**செம்மறியாடு வெள்ளாடாக விற்பனை : மக்களை ஏமாற்றும் மை வித்தை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,02:28 IST

சேலம்: புரட்டாசி மாத ஐந்து சனிக்கிழமைகள் முடிந்ததால், நேற்று சேலத்தில் கறி விற்பனை விறுவிறுப்பாக நடந்தது. இதை பயன்படுத்தி பெரும்பாலான கறிக்கடைகளில் செம்மறி ஆட்டின் வாலில் கறுப்பு மை தடவி வெள்ளாட்டு கறி என்று விற்பனை செய்தனர்.புரட்டாசி மாதம் முழுவதும் பெரும்பாலான மக்கள் விரதம் கடைபிடிப்பதால் கறிக்கடைகளில் கறி விற்பனை வெகுவாக குறைந்தது. கடந்த சனிக்கிழமையுடன் புரட்டாசி மாதத்தின் ஐந்து சனிக்கிழமைகளும் முடிவடைந்ததால், நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் மக்கள் அசைவம் சாப்பிட ஆரம்பித்துவிட்டனர்.

நேற்று அதிகாலை முதலே கறிக்கடைகளில் மக்கள் கூட்டம் அதிகரித்தது. மீன், கோழி, ஆடு போன்ற இறைச்சி கடைகளில் நேற்று முழுவதும் விற்பனை ஜோராக நடந்தது. ஆட்டுக்கறி ஒரு கிலோ 240 முதல் 260 ரூபாய் வரையிலும், மீன் வகைகளில் ரோகு ஒரு கிலோ 80 ரூபாய், கட்லா ஒரு கிலோ 85 ரூபாய் வரையிலும், நாட்டுக்கோழி கிலோ 180 முதல் 200 ரூபாய் வரையிலும், பிராய்லர் கோழி 120 முதல் 130 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெரும்பாலான கறிக்கடைகள் நோய்வாய்ப்பட்ட மற்றும் வயது முதிர்ந்த செம்மறி ஆடுகளை நங்கவள்ளி, வனவாசி இடைப்பாடி, கொளத்தூர் போன்ற பகுதிகளில் குறைந்த விலைக்கு வாங்கி வந்து ஆட்டின் தோலை உரித்து, வாலில் கறுப்பு மை தடவி வெள்ளாடு கறி என்று கூறி விற்பனை செய்தனர். செம்மறி ஆட்டுக்கறி உடல் உபாதையை ஏற்படுத்தும் என்பதால், பெரும்பாலான மக்கள் அதை சாப்பிடமாட்டார்கள். இந்நிலையில் வியாபாரிகள் சிலர் குறைந்த விலைக்கு செம்மறி ஆடுகளை வாங்கி வந்து மை தடவி விற்பனை

செய்துள்ளனர். ஆட்டுக்கறி விலை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு செல்லும் நிலையில், இதுபோன்ற மோசடிகள் நடப்பதால், மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சில கறிக்கடைகாரர்கள் யார் இருந்தாலும் கண்டுகொள்ளாமல் மை டப்பாவில் இருந்து மை எடுத்து மக்கள் முன்பே மையை செம்மறி ஆட்டின் வாலில் தடவும் செயல் நடந்து வருகிறது.ஏற்கனவே, நாள்பட்ட ஆட்டு தலைகளும், குடல்களும் பெங்களூருவில் இருந்து வாங்கி வந்து சேலத்தில் விற்பனை செய்ததை மாநகராட்சி அதிகாரிகள் கண்டுபிடித்து பறிமுதல் செய்து எச்சரித்தனர். மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்து, இதுபோன்ற மோசடி கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும்.

**மணிலா பயிர் சாகுபடிக்கு மானிய விலையில் ஜிப்சம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2010,02:43 IST

அவலூர்பேட்டை: மணிலா பயிருக்கு மானிய விலையில் ஜிப்சம் விநியோகிக்கப்படுகிறது. மேல்மலையனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஏழுமலை வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிட்டுள்ளதாவது: மேல்மலையனூர் வட் டாரத்தில் ஐப்பசி, கார்த் திகை மாதங்களில் மணிலா, இறவை பயிராக பெருமளவிற்கு சாகுபடி செய்யப்பட உள்ளது. மணிலாவில் பொக்கு இல்லாத விதைகள் திரட் சியான பருப்புகள் மற்றும் அதிக மகசூல் பெற இரண்டரை ஏக்கருக்கு 200 கிலோ அளவில் ஜிப்சம் அடியுரமாகவும், மேலுரமாக ஜிப்சம் 200 கிலோவும் இட வேண்டும். மேல்மலையனூர், அவலூர்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் இரண்டரை ஏக்கருக்கு 750 ரூபாய் மானிய விலையில் ஜிப் சம் பெற்று விவசாயிகள் பலனடையலாம்.

**விவசாய கருவிகள் மானியத்தில் வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2010,02:42 IST

விழுப்புரம்: வேளாண் பொறியியல் துறை சார்பில் மானியத்துடன் வேளாண் கருவிகள் 6 விவசாயிகளுக்கு வழங் கப்பட்டன. விழுப்புரம் மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் மானியத்துடன் வேளாண் கருவிகள் வாங்க கடனுதவி வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் 2 பேருக்கு நாற்று நடும் இயந்திரங்கள், 2 பேருக்கு களை எடுக்கும் கருவிகள், ஒருவருக்கு வேளாண் நடவு சல்லடை ஆகியவற்றை கலெக்டர் பழனிசாமி வழங்கினார். வேளாண் பொறியியல் துறை

செயற் பொறியாளர் காதர் மொய்தீன், உதவி செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன் உட்பட பலர் உடனிருந்தனர்.

**ஆடு வளர்ப்போர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை பணி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,01:04 IST

கிள்ளை : சிதம்பரம் அருகே பர ங்கிப்பேட்டை ஒன்றிய தெற்கு பகுதியில் 80 க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆடு வளர்ப்போர் நல வாரியத்திற்கான உறுப்பினர் சேர்க்கைக்கான பணி நடக்கிறது. தமிழகத்தில் முதன் முதலாக துவங்க உள்ள ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினர் களாக சேர்ந்து பயன்பெற 5 ஆடுகளுக்கும் குறையாமல் வளர்ப்பவர்கள் உரிய விதிமுறைகளுடன் சேர்ந்து பயன்பெறலாம் என மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து கிள்ளை பேரூராட்சி, தில்லைவிடங்கன், மடுவங்கரை, நஞ்சைமகத்துவாழ்க்கை, பின்னத்தூர், நக்கரவந் தன்குடி, கணக்கரப்பட்டு, குமாரமங்கலம், கீழ்அனுவம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட 80க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வி.ஏ.ஓ.,விடமிருந்து சான்று மூலம் விண்ணப்பிக்கும் பணி நடக்கிறது.

**கெடிலம் உபவடிகால் விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்கள் விநியோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,22:40 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூர் வட்டாரத்தில் கெடிலம் உபவடிகால் பகுதியில் உள்ள 20 கிராமங்களில் 100 சதவீத மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது.

திருநாவலூர் வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:திருநாவலூர் வட்டாரத்தில் 2010-11ம் ஆண்டு முதல் நீர்வள நிலவளத் திட்டம் கெடிலம் உபவடிகால் பகுதியில் 20 கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் படி ஆத்தூர், ஆதனூர், களமருதூர், டி.ஒரத் தூர், பா.கிள்ளனூர், பாச் சாப் பாளையம், உ.செல்லூர், பாண்டூர், அரளி, செம்மனங்கூர், நகர், செங்குறிச்சி, பாதூர், மதியனூர், பு.மாம் பாக்கம், கூ.கள் ளக்குறிச்சி, மட்டிகை, சேந்தநாடு, மணலூர், களத்தூர் ஆகிய கிராம விவசாயிகள் பயனடைய உள்ளனர். இந்த கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் 100 சதவீத மானிய விலையில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடிக்கு இரண்டரை ஏக்கருக்கு 10 ஆயிரத்து 250 ரூபாயும், மணிலா மற் றும் மக்காச்சோளம் சாகுபடிக்கு 4,000 ரூபாயும், மண்புழு உரத்தொட்டி அமைக்க 6,000

ரூபாயும், பயறு சாகுபடிக்கு 2,500 ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்களும் வழங்கப் பட உள்ளது. இத்திட்டத்தில் பயன் பெற திருநாவலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வேளாண்மை கல்லூரி மாணவர்கள் தியாகதுருகத்தில் களப்பணி பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 17,2010,02:22 IST

தியாகதுருகம் : வேளாண்மை கல்லூரி மாணவர்கள் தியாகதுருகம் அடுத்த முடியனூர் கிராமத்தில் நீர்வள நிலவளத் திட்ட களப்பணி பயிற்சியில் ஈடுபட்டனர். திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல் லூரி மாணவர்கள் தியாக துருகம் அடுத்த முடியனூரில் விவசாயம் தொடர் பான களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். செம்மை நெல் சாகுபடி, மண்பரிசோதனை, விதை நேர்த்தி, சீவல் முறை கரும்பு சாகுபடி பயிற்சி மேற்கொண்டனர். பின்னர் தியாகதுருகம் வேளாண் உதவி அலுவலர் ராமச்சந்திரன் தலைமையில் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. அதில் கோமுகி நதி உப வடி நிலப் பகுதியில் நீர்வள நிலவளத் திட் டத்தில் பயன் பெறும் கிராமங்கள் குறித்து விளக்கப் பட்டது. வடதொரசலூர் கிராமத்தில் விவசாயி லோகநாதன் வயலில் செம்மை நெல் நடவு செய்வது குறித்து பயிற்சி பெற்றனர். அதில் கோனோ வீடர் களைக்கருவியை பயன்படுத்தும் முறை குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக் கப்பட்டது. பயிற்சியில் மாணவர்கள் அருண்குமார், தினேஷ்குமார், குருநாதன், ஜாக் கிஷ்பால், கொங்கரசன், பெரியசாமி, பிரபாகர், கலில் குமார், சரவணன், சிவக்குமார், சுரேஷ், கோபாலகிருஷ்ணன் பங்கேற்றனர்.

**மானிய விலையில் ஜிங்க் சல்பேட் உரம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 16,2010,02:45 IST

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியத்தில் ஜிங்க் சல்பேட் உரம் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. மேல்மலையனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஏழுமலை வெளியிட்டுள்ள அறிக்கை: மேல்மலையனூர் ஒன்றியத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கருக்கு 25 கிலோ ஜிங்க் சல்பேட் உரம் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேல்மலையனூர், அவலூர் பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் தற்போது விநியோகம் செய்யப்படுகிறது. நெல் சாகுபடியில் நுண்ணூட்டச்சத்தினை நிவர்த்தி செய்திட ஜிங்க் சல்பேட் உரத்தை பயன்படுத்தி விவசாயிகள் கூடுதல் மகசூல் பெறலாம்.

## செப்டம்பர் வரையிலான 11 மாதங்களில் தாவர எண்ணெய் இறக்குமதி 84.80 லட்சம் டன்னாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) செப்டம்பர் வரையிலான 11 மாதங்களில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 84.80 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தைக் காட்டிலும் 5 சதவீதம் அதிகமாகும். அப்பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 79.95 லட்சம் டன்னாக இருந்தது.

செப்டம்பர் மாதத்தில்...

தாவர எண்ணெய் என்பது சமையல் எண்ணெய் வகைகளையும், இதர பயன்பாட்டு எண்ணெய் வகைகளையும் குறிக்கிறது. செப்டம்பர் மாதத்தில் மட்டும் 9.42 லட்சம்

*டன் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, ஆகஸ்டு மாதத்தை விட 9 சதவீதம் அதிகமாகும். 2009 நவம்பர் முதல் 2010 செப்டம்பர் வரையிலான காலத்தில், பாமாயில் இறக்குமதி 58.80 லட்சம் டன்னாக சற்று சரிவடைந்துள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 59.98 லட்சம் டன்னாக இருந்தது. இதே காலகட்டத்தில், கச்சா சோயாபீன் எண்ணெய் இறக்குமதி 15.41 லட்சம் டன்னாகவும், சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி 58,000 டன்னாகவும் உள்ளது. கடுகு எண்ணெய் மற்றும் பருத்தி எண்ணெய் இறக்குமதி தலா 13,000 டன்னாக உள்ளது. இது, முந்தைய பருவத்தின் முதல் 11 மாதங்களில் 1.56 லட்சம் டன்னாக இருந்தது.*

*பத்து சதவீதம் குறைந்தது*

*செப்டம்பர் மாதத்தில், சமையலுக்கு பயன்படாத தாவர எண்ணெய் வகைகளில் இறக்குமதி 18,495 டன்னாக உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 40,296 டன்னாக இருந்தது. 11 மாத காலத்தில், சமையலுக்கு பயன்படாத தாவர எண்ணெய் வகைகளின் ஒட்டுமொத்த இறக்குமதி 10 சதவீதம் குறைந்துள்ளது. அதாவது, 4.07 லட்சம் டன்னிலிருந்து 3.66 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.*

*நவம்பர் மாதம் தொடங்கும் புதிய பருவத்தில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 95 லட்சம் டன்னாக உயரும் என இத்துறையைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அக்டோபர் மாதத்துடன் நிறைவடையும் நடப்பு பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 90 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*இறக்குமதி அதிகரிக்கிறது*

*எதிர்வரும் புதிய பருவத்தில் பாமாயில் 72 லட்சம் டன்னும், சோயா எண்ணெய் 15 லட்சம் டன்னும், சூரியகாந்தி எண்ணெய் நான்கு லட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்படும். இதர எண்ணெய் வகைகளின் இறக்குமதி ஒட்டுமொத்தத்தில் நான்கு லட்சம் டன்னாக இருக்கும் என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*கடந்த 2000–01–ஆம் ஆண்டு பருவத்துடன் ஒப்பிடும்போது, தற்போது நம் நாட்டில் சமையல் எண்ணெய் இறக்குமதி 6.5 சதவீதம் உயர்ந்து 1.47 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, 2015–ஆம் ஆண்டில் 2 கோடி டன்னாக உயரும் என ரேபோ ஃபைனான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*நடப்பு பருவத்தின் முதல் பத்து மாதங்களில் (நவம்பர்–ஆகஸ்டு) 74.47 லட்சம் டன் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய எண்ணெய் பருவத்தின் இதே காலத்தை விட 5 சதவீதம் அதிகமாகும்.*

*சென்ற ஆகஸ்டு மாதத்தில், நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி, சென்ற*

ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 64 சதவீதம் அதிகரித்து 10.65 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பு செப்டம்பர் மாதத்தில் 7 லட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து, நடப்பாண்டு பண்டிகை காலத்தில் சமையல் எண்ணெய் விலை குறைய வாய்ப்புள்ளது. இந்தியாவில் ஆண்டுக்கு 80 லட்சம் டன் சமையல் எண்ணெய் உற்பத்தி ஆகிறது. அதேசமயம், சமையல் எண்ணெய் பயன்பாடு இதைக்காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக 1.60 கோடி டன்னாக உள்ளது. நம் நாடு அதன் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. எனவே, சர்வதேச அளவில் இதன் விலை உயரும்போது அது இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தியாவின் சமையல் எண்ணெய் உற்பத்தி, நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) 70 லட்சம் டன்னாக உயரும் என்று அமெரிக்க வேளாண் துறை முன்னறிவிப்பு செய்துள்ளது. இது, வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், சமையல் எண்ணெய் உற்பத்தி 13 சதவீதம் உயர்ந்து 79.10 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. குறிப்பாக, எதிர்வரும் பருவத்தில், கடுகு எண்ணெய், சோயா எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பற்றாக்குறை

சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை, நம் நாடு கடந்த 1994–95–ஆம் ஆண்டு பருவத்தில் 5 சதவீதமே இறக்குமதியை சார்ந்திருந்தது. இது, தற்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 2009–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில் ரூ.28,000 கோடிக்கு சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் உள்நாட்டில் சமையல் எண்ணெய்க்கான பற்றாக்குறை 1.77 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2009 காலண்டர் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள்தொகை பெருக்கம்

நம் நாடு சமையல் எண்ணெய் இறக்குமதியில் முன்னிலை வகித்து வருகிறது. இந்நிலையில் இனி வரும் ஆண்டுகளில் சமையல் எண்ணெயை மேலும் அதிகமாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகும் என்று கூறப்படுகிறது. பணவீக்கமும், மக்கள்தொகைப் பெருக்கமும் இதே அளவில் உயர்ந்து வருமானால் அடுத்த சில

ஆண்டுகளிலேயே நம் நாடு சமையல் எண்ணெய், சர்க்கரை மற்றும் உணவு தானியங்கள் இறக்குமதியில் முன்னணி நாடாக உருவெடுக்கும்.